உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்
சிதம்பரம்
இராமலிங்கப்பிள்ளை அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

# வடிவுடைமாணிக்கமாலை.

இஃது.
சிதம்பரம்.
பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி

இ வை .
சரவணபுரம்.
சண்முகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.

---

புரசபாக்கம்.
ஏழுமலைப்பிள்ளையவர்களது
விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1890
பன்னிரண்டாம் புத்தகம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# வடிவுடைமாணிக்கமாலை.

## காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்டவொற்றிப்பதியுடையாளிடஞ்சேர்ந்தமணி
வார்கொண்டகொங்கை வடிவாம்பிகைதன்மலரடிக்குத்
தார்கொண்டசெந்தமிழ்ப்பாமாலைசாத்தத்தமியனுக்கே
ஏர்கொண்டநல்லருளீயுங்குணாலயவேரம்பனே.

கட்டளைக்கலித்துறை.

திருச்சிற்றம்பலம்.

கடலமுதேசெங்கரும்பேயருட்கற்பகக்கனியே
யுடலுயிரேயுயிர்க்குள் ளுணர்வேயுணர்வுள்ளொளியே
யடல்விடையாரொற்றி யாரிடங்கொண்டவருமருந்தே
மடலவிழ்ஞானமலரேவடிவுடைமாணிக்கமே. (௧)

அணியேயணிபெறுமொற்றித் தியாகர்தம்மன்பு
றுசற், குணியேயெம்வாழ்க்கைக் குலதெய்வமேமலைக்
கோன்றவமே, பணியேன்பிழைபொறுத் தாட்கொண்
டதெய்வப்பதிகொள்சிந்தா, மணியேயென்கண்ணுண்
மணியேவடிவுடைமாணிக்கமே. (௨

டைமேவுகரித், தோலையிட்டாடுந்தொழிலுடையோனைத்துணிந்து முன்னாண், மாலையிட்டாயிஃதென்னேவடிவுடைமாணிக்கமே. (௰௩)

தனையாள்பவரின்றி நிற்கும்பரமன்றனியருவாய், வினையாளுயிர் மலநீக்கி மெய்வீட்டின்விடுத்திடுநீ, யெனையா ளருளொற்றியூர்வாழ வன்றன்னிடத்துமொரு, மனையாளெனநின்றதென்னே வடிவுடைமாணிக்கமே.

பின்னின்ற பிள்ளையின்மேலார் வந்தாய்க்கெனப் பேசுவர்நீ, முன்னின்றபிள்ளையின்மே லாசையுள்ளார் மெய்யசுரர், கொன்னின்றபோர்க்கிளம்பிள்ளையையே வக்கொடுத்ததென்னேமன்னின்றவொற்றிமயிலே வடிவுடைமாணிக்கமே. (௰௫)

பையாளுமல்குற்சுரர்மடவார்கள்பலருளுமிச் செய்யாளும்வெண்ணிறமெய்யாளுமெய்த்தவஞ்செய்தனரோ, கையாளுநின்னடிக் குற்றேவல்செய்யக்கடைக்கணித்தாய், மையாளுங்கண்ணொற்றிவாழ்வே வடிவுடைமாணிக்கமே. (௰௬)

இலையாற்றுநீமலர்க்காலாற்பணிக்குங்குற்றேவலெல்லாந், தலையாற்செயும்பெண்கள்பல்லோரிற்பூமகடன்னைத்தள்ளாய், நிலையாற்பெரியநின்றொண்டர்தம் பக்கநிலாமையினான், மலையாற்கருளொற்றிவாழ்வேவடிவுடைமாணிக்கமே. (௰௭)

கலைமகளோ நின்பணியையன்போடுங் கடைப்பிடித்தா, ளலைமகளோவன்பொடுபிடித்தாளொற் கறைதி

கண்டாய், தலைமகளேபருட்டாயே செவ்வாய்க்கருந்தாழ்குழற்பொன் மலைமகளேயொற்றிவாழ்வேவடிவுடைமாணிக்கமே. (௰௮)

பொன்னோடுவாணியென்போரிருவோரும் பொருணாற்கல்வி, தன்னோடருளுந்திறநின்குற்றேவலைத்தாங்கின்ற,பின்னோவைத்தன்முன்னோதெளிந்திடப்பேசுகநீ, மன்னோடெழிலொற்றியூர் வாழ்வடிவுடைமாணிக்கமே. (௰௯)

காமட்டலர் திருவொற்றிநின்னாயகன்கந்தைசுற்றியேமட்டணாரொடு நிற்பதுகண்டுமிரங்கலர்போ, னீமட்டுமேபட்டுடுக்கின்றனையுன்ற னேயமென்னோ, மாமட்டலர்குழன்மானேவடிவுடைமாணிக்கமே. (௨௰)

வீற்றார்நின்றன்மணைத்தம்பியின்மேற்சிறுமெல்லனிச்ச, மாற்றாநின்சிற்றடிப்போதினைத்தூக்கிவைத்தாரெனின்மா, லேற்றார்திருவொற்றியூரார்களக்கறுப்பேற்றவரோ, மாற்றாவியல்கொண்மயிலே வடிவுடைமாணிக்கமே. (௨௧)

பொறுப்புறுநீலியென்பார்நின்னை மெய்யதுபோலுமொற்றி, விருப்புறுநாயகன் பாம்பாபரணமும் வெண்டலையு, நெறுப்புறுகையுங்கனன் மேனியுங்கண்டுநெஞ்சமஞ்சாய், மறுப்புறுகொங்கைமயிலேவடிவுடைமாணிக்கமே. (௨௨)

அனம்பொறுத்தான்புகழொற்றி நின்னுயகனங் குமிழித், தனம்பொறுத்தாடொருமாற்றுளைத் தன்முடிதன்னில்வைத்தே, தினம்பொறுத்தானதுகண்டுஞ்சினமின்றிச்சேர்ந்தநின்போன்,மனம்பொறுத்தாரெவர்கண்டாய்வடிவுடைமாணிக்கமே. (உ௩

ஒருருவாயொற்றியூரமர்ந்தார் நின்னுடையவர்பெண், சீருருவாகுநின்மாற்றுளைநீதெளியாத்திறத்தி, னீருருவாக்கிச் சுமந்தாரதனைநினைந்திலேயே, வாருருவார்கொங்கைநங்காய்வடிவுடைமாணிக்கமே. (உ௪)

சார்ந்தேநின்பாலொற்றியூர்வாழுநாயகர் தாமகிழ்வு, கூர்ந்தேகுலாவுமக்கொள்கையைக்காணிற்கொதிப்பளென்று, தேர்ந்தேயக்கங்கையைச்செஞ்சடைமேற்சிறைசெய்தனரொண் வார்ந்தேகுழைகொள்விழியாய்வடிவுடைமாணிக்கமே. (உ௫)

நீயேயெனதுபிழைகுறிப்பாயெனினின்னடிமைப், பேயேன்செயும்வண்ணமெவ்வண்ணமோவெனைப்பெற்றளிக்குந்,தாயேகருணைத்தடங்கடலேயொற்றிச்சார்குமுத, வாயோர் * சவுந்தரமானே வடிவுடைமாணிக்கமே, (உ௬)

முப்போதுமன்பர்கள்வாழ்த்தொற்றியூரொம்முதல்வர்மகி, ழெப்போதருமலைப்பெண்ணமுதேயென்று

* சௌந்தரம்-எ-து, சவுந்தரமெனப்போலியாயிற்று

வந்துநினை,யெப்போதுஞ்சிந்தித்திடர்நீங்கிவாழவென
க்கருள்வாய், மைப்போதனையகண்மானேவடிவுடைமா
ணிக்கமே. (உஎ)

மீதலத்தோர்களுள்யார்வணங்காதவர்மேவுநடுப்
பூதலத்தோர்களுள்யார்புகழாதவர்போற்றிநிதம்
பாதலத்தோர்களுள்யார்பணியாதவர்பற்றிநின்றாண்
மாதலத்தோங்கொற்றிவாழ்வேவடிவுடைமாணிக்கமே

சேய்க்குற்றந்தாய்பொறுத்தேடாவருகெனச்செப்
பவளிந், நாய்க்குற்றநீபொறுத்தாளுதல்வேண்டுநவின்
மதியின், றேய்க்குற்றமாற்றுந்திருவொற்றி நாதர்தந்
தேவியன்பர், வாய்க்குற்றநீக்கு மயிலேவடிவுடைமா
ணிக்கமே. (உகூ)

செங்கமலாசனன்றேவிபொன்னாணுந்திருமுதலோர்
சங்கமதாமிடற்றோங்குபொன்னாணுந்தலைகுனித்துத்
துங்கமுறாதுளநாணத்திருவொற்றித்தோன்றல்புனை
மங்கலநாணுடையாளேவடிவுடைமாணிக்கமே. (௩௰)

சோடாரியன்மணம்வீசச்செயன் மணஞ்சேர்ந்து பொ
ங்கவேடார்பொழிலொற்றியூர்ண்ணனெஞ்சமிருந்துவ
க்க, வீடாவிருளுமுகிலும்பின்னிட்டுவெருவவைத்த
வாடாமலர்க்குழலாளேவடிவுடைமாணிக்கமே. (௩க)

புரநோக்கினாற்பொடிதேக்கிய வொற்றிப்புனிதர்களக்
* கரநோக்கிநல்லமுதாக்கிநிற்போற்றுங்கருத்தினரா

* கரம், எ-து, விடம்.

தரநோக்கியுள்ளிருணீக்கிமெய்ஞ் ஞானத்தனிச்சுதந்தா
ன், வரநோக்கியாள்விழிமானேவடிவுடைமாணிக்கமே

உன்னுந்திருவொற்றி யூருடையார்நெஞ்சுவப்பவெழி
ற், றுன்னுமுயிர்ப்பயிரெல்லாந் தழைக்கச்சுகக்கருணை
யென்னுந்திருவமுதேயாமலூற்றியெமதுளத்தின்
மன்னுங்கடைக்கண்மயிலேவடிவுடைமாணிக்கமே. ()

வெள்ளங்குளிருஞ்சடைமுடியோ னொற்றிவித்தகன்ற
னுள்ளங்குளிரமெய்பூரிப்பவானந்த மூற்றெடுப்பத்
தெள்ளங்குளிரின்னமுதே யளிக்குஞ்செவ்வாய்க்குமு
த, வள்ளங்குளிர்முத்தமானே வடிவுடைமாணிக்கமே.

மாநந்தமார்வயற்காழிக்கவுணியர்மாமணிக்கன்
ஞானந்தவின்னமுதூற்றுசீ திருமுலையாரணங்கே
காநந்தவோங்குமெழிலொற்றியாருட்களித்தியலும்
வானந்தருமிடைமானேவடிவுடைமாணிக்கமே. (௩௫)

வான்றேடநான்குமறைதேடமாலுடன்வாரிசமேலான்
றேட மற்றையருந்தவர்தேடவென்னன்பின்மையால்
யான்றேடவென்னுளஞ்சேரொற்றியூரெம்மிருநிதியே
மான்றேடும்வாட்கண்மயிலேவடிவுடைமாணிக்கமே ()

முத்தேவர்*விண்ணவன்முதற்றேவர்சித்தர் முனிவர்மற்
றை,யெய்த்தேவருநின்னடிநினையார்நினைக்கின்றிலர்தா
ஞ்செத்தேபிறக்குஞ்சிறியான்றேருவொற்றித்தேவர்நற்
றுமத்தேர்வாமமயிலேவடிவுடைமாணிக்கமே. ()

திருநாணினைத்தொழுநன்னாடொழாமற் செலுத்தியநா
ள், கருநாளெனமறையெல்லாம்புகலுங்கருத்தறிந்தே
யொருநாளினுநின்றனைமறவாரன்பரொற்றியில்வாழ்
மருநாண்மலர்க்குழன்மானேவடிவுடைமாணிக்கமே. ()

வாணாளடைவர்வறுமையுறார்நன்மனைமக்கள்பொன்
பூணாளிடம்புகழ்போதம் பெறுவர்பின்புன்மையொன்
றுங், காணார்நின்னாமங்கருதுகின்றோரொற்றிக் கண்ணு
தல்பான், மாணார்வழுத்து மயிலேவடிவுடைமாணிக்க

சீரறிவாய்திருவொற்றிப்பரமசிவத்தைநினைப்
பேரறிவாயவ்வறிவாம் வெளிக்கப்புறத்துநின்றாய்
யாரறிவார்நின்னைநாயேனறிவதழகுடைத்தே
வாரொறிபூண்முலைமானேவடிவுடைமாணிக்கமே. (௪௰)

போற்றிடுவோர்தம்பிழையாயிரமும்பொறுத்தருள்செ
ய், வீற்றொளிர்ஞானவிளக்கேமரகத மென்கரும்பே
யேற்றொளியொற்றியிடத்தாரிடத்திலிலங்குமுயர்
மாற்றொளிரும்பசும்பொன்னேவடிவுடைமாணிக்கமே

ஆசையுள்ளாரயன்மாலாதிதேவர்கள்யாருநின்றாட்
பூசையுள்ளாரொணிவெங்கேயுலகர்செய்பூசைகொள்வா
ர், தேசையுள்ளாரொற்றியூருடையாரிடஞ்சேர்மயிலே
*மாசையுள்ளாபுகழ்மானேவடிவுடைமாணிக்கமே. ()

---

* மாசை, எ-து, பொன்,

அண்டாரைவென்றுலகாண்டுமெய்ஞ்ஞானமடைந்துவிண்ணிற், பண்டாரை சூழ்மதிபோலிருப்போர்களின்பத்தர்பதங், கண்டாரைக்கண்டவரன்றே திருவொற்றிக்கண்ணுதல்சேர், வண்டாரை வேலன்னமானேவடிவுடைமாணிக்கமே. (௪௩)

அடியார்தொழுநின்னடிப்பொடிதான் சற்றணியப்பெற்ற, முடியாலடிக்குப்பெருமைபெற்றாம்முருக்தன்சந்தக்கடியார்மலரயன்முன்னோர்தன்னொற்றிக்கடவுட்செம்பால்வடியாக்கருணைக்கடலே வடிவுடைமாணிக்கமே. (௪௪)

ஓவாதயன்முதலோர்முடிகோடியுறழ்ந்துபடி
லாவாவநிச்சம்பொருமலர்ச்சிற்றடியாற்றுங்கொலோ
காவாயிமயப்பொற்பாவாயருளொற்றிக்காமர்வல்லி
வாவாவெனுமன்பர்வாழ்வேவடிவுடைமாணிக்கமே. ()

இட்டார்மறைக்கு முபநிடதத்திற்கு மின்னுஞ்சற்று, மெட்டாநின்பொன்னடிப்போதெளியேன்றலைக்கெட்டுங்கொலோ, கட்டார்சடைமுடி யொற்றியெம்மானெஞ்சகத்தமர்ந்த, மட்டார்குழன்மடமானேவடிவுடைமாணிக்கமே. (௪௬)

வெளியாய்வெளிக்குள் வெறுவெளியாய்ச் சிவமேநிறைந்த, வொளியாயொளிக்கு ளொளியாம் பரை

நினையொப்பவரா, ரெளியார்க்கெளியர் திருவொற்றி யார்மெய்யினிதுபாி, மளியாநின்றேங்கு மருவேவடி வுடைமாணிக்கமே. (சஎ)

விணங்காதலன்பர்தமன்பிற்குநின்பு லவிக்குமன்றி, வ ணங்காமதிமுடி யெங்கள்பிரானொற்றி வாணனுநின், குணங்காதலிந்துமெய்க்கூறுதந்தானெனக்கூறுவருன் மணங்காதலிந்த றியார்வடிவுடைமாணிக்கமே. (சஅ)

பண்ணும்பல்வேறண்ட மெல்லாமவ்வண்டப்பரப் பிநின்று, துன்னுஞ்சராசரம் யாவையுமீன்றது சூழ்ந்த முன்னை, யின்னுமிளந்தையழியாதகன்னிகை யென்ப தென்னே, மன்னுஞ்சுகாநந்தவாழ்வேவடிவுடைமாணி க்கமே. (சகூ)

சினங்கடந்தோருள்ளச் செந்தாமரையிற் செழித் துமற்றை, மனங்கடந்தோதுமவ்வாக்குங்கடந்த மறை யன்னமே, தினங்கடந்தோர் புகழொற்றி யெம்மானி டஞ்சேரமுதே, வனங்கடந்தோன்புகழ் மானேவடிவு டைமாணிக்கமே. (௫௰)

வல்லாரும்வல்லவரல்லாருமற்றை மனிதர்முத, லெல் லாருநின்செய லல்லாதணுவுமியக்கிலரோ, வில்லாமை யாலுழல் புல்லேன்செய்குற்றங்களேதுகணடாய், ம ல்லார்வயலொற்றி நல்லாய்வடிவுடைமாணிக்கமே. ()

ன்னையருந்தவ மென்னைமுயன்றனர் முன்னுமொற்
றி, வன்னேரிளமுலைமின்னைவடிவுடை மாணிக்கமே.

கணமொன்றிலேனு மென்னுள்ளக் கவலைக்கடல்
கடந்தே, குணமொன்றிலேனதுசெய்கேநின் னுள்ளக்
குறிப்பறியேன், பணமொன்றுபாம்பணியொற்றியெ
ம்மானிடப்பாலிற்றெய்வ, மணமொன்றுபச்சைக்கொ
டியேவடிவுடைமாணிக்கமே. (௬௧)

கருவேதனையற வென்னெஞ்சகத்திற் களிப்பொ
டொற்றிக், குருவேயெனுநின்கணவனுநீயுங் குலவுமந்
தத், திருவேயருள்செந்திருவே முதற்பணிசெய்யத்த
ந்த, மருவேமருவுமலரோ வடிவுடைமாணிக்கமே. (௬௨)

எண்ணியவெண்ணங்க ளெல்லாம்பலிக்க வெனக்
குனருள், பண்ணியவுள்ளங்கொளுள்ளும் புறம்பும்ப
ரிமளிக்கும், புண்ணியமல்லிகை போதே யெழிலொற்
றியூரனார்பான், மண்ணியபச்சை மணியே வடிவுடை
மாணிக்கமே. (௬௩)

தீதுசெய்தாலுநின் னன்பர்கடம்முன் செருக்கிநி
ன்று, வாதுசெய்தாலுநின் றுண்மறந்தாலு மதியிலி
யே, னேதுசெய்தாலும் பொறுத்தருள்வா யொற்றியி

ண்ணிடைப்பூ, மாதுசெய்தாய்க்குழன் மானே வடிவுடை
மாணிக்கமே. (௯௪)

மருந்தினின் றாகொற்றியூர் வாழுநின் றன்மகிழ்நன்
றானுந், திருந்தினின் றார்புகழ் நின்முன் றுநல் லருட்
டேன்விழைந்தே, விருந்தினின் றேன் சற்றுமுள்ளிரக்
காவிதத்தைக்கண்டு, வருந்தினின் றேனிதுநன் றோவடி
வுடைமாணிக்கமே. (௯௫)

என்போற் குணத்திலிழிந்தவரில்லை யெப்போது
மெங்கு, நின்போலருளிற் சிறந்தவரில்லையிச் சீர்மையி
னாற், பொன்போலுநின்னருளன்னேயெனக்கும் புரிதி
கண்டாய், மன்போலுயரொற்றிவாழ்வே வடிவுடைமா
ணிக்கமே. (௯௬)

அன்பேமிகுமிவ்வடியேன் மனத்தினின் றுய்யவரு
ளின்பேமிகுவதெந்நாளோ வெழிலொற்றி யெந்தையுயி
ர்க், கண்பேமெய்த்தொண்டரறிவே சிவநெறிக்கண்பிலர்
பால், வன்பேமெய்ப்போதவடிவே வடிவுடைமாணிக்க
மே. (௯௭)

சற்றேயெனினுமென் னெஞ்சத்துயரந் தவிரவுநி
ன், பொற்றேமலர்ப்பதம் போற்றவுமுள்ளம் புரிதிக
ண்டாய், சொற்றேறறிஞர்புகழொற்றியேவுந் துணைவ
ர்தஞ்செய், மற்றேர்புயத்துணைமானே வடிவுடை மாணி
க்கமே. (௯௮)

சந்தோடமாப்பிறரெல்லாமிருக்கவுஞ்சஞ்சலத்தா
லெந்தோவொருதமியேன்மட்டும்வாடலருட்கழகோ, நந்
தோடீக்கியநங்காயெனத்திருநான்முகன்மால்,வந்தோ
துமொற்றிமயிலேவடிவுடைமாணிக்கமே. (௬௯)

அடியேன்மிசைசெய்பிழையிருந்தாலு மவைபொ
றுத்துச், செடியேதநீக்கிநற்சீரருள்வாய்திகழ் தெய்வ
மறைக், கொடியேமரகதக் கொம்பே யெழிலொற்றிக்
கோமளமே, வடியேயில்விழிமானே வடிவுடைமாணி
க்கமே. (௭௰)

கண்ணப்பனைத்துநற்காளத்தியார்மங் கலங்கொ
லொற்றி, நண்ணப்பாவேண்டு நலமேயானந்தநன்னற
வே, யெண்ணப்படாவெழிலோவியமேயெமையென்று
கொண்ட, வண்ணப்பசும்பொன் வடிவேவடிவுடைமா
ணிக்கமே. (௭௧)

கற்பேவிகற்பங்கடியுமொன்றேயெங்கள் கண்ணி
றைந்த, பொற்பேமெய்த்தொண்டர்தம் புண்ணியமே
யருட் போதவின்பே, சொற்போறிவுட் சுகப்பொரு
ளேமெய்ச்சுயஞ்சுடரே, மற்போர்பெறுமொற்றிமானே
வடிவுடைமாணிக்கமே (௭௨)

மிகவேதுயர்க்கடல்வீழ்ந்தேனை நீகைவிடுதலருட்
டகவேயெனக்குநற்றாயேயகிலசராசரமுஞ், சுகவேலை
மூழ்கத்திருவொற்றியூரிடந் துன்னிப்பெற்ற, மகவே
யெனப்புரக்கின்றோய்வடிவுடைமாணிக்கமே. (௭௩)

வேதங்களாயொற்றி மேவுஞ்சிவத்தின் விளைவருளாய்ப், பூதங்களாய்ப்பொறியாய்ப்புலனாகிப் புகல்காணபேதங்களாயுயிராகியநின்னையிப் பேதையென்வாய், வாதங்களாலறிவேனேவடிவுடைமாணிக்கமே. (௭௪)

மதியேமதிமுகமானேயடியர்மனத்துவைத்த, நிதியேகருணைநிறைவேசுகாநந்தநீணிலையே, கதியேகதிவழிகாட்டுங்கண்ணேயொற்றிக்காவலர்பால், வதியேரிளமடமானேவடிவுடைமாணிக்கமே. (௭௫)

ஆருந்துயரந் தழுந்துகின்றேனையிங் கஞ்சலென்றே, கூறுக்குறையென் குறையேயினிநின் குறிப்பறியேன், றேருச்சிறியர்க்கரிதாந்திருவொற்றித்தேவர்மகிழ், மாருக்கருணைமழையேவடிவுடைமாணிக்கமே. )

எற்றேநிலையொன்றுமில்லாதுயங்கு மெனக்கருளச், சற்றேநின்னுள்ளந்திரும்பிலையான்செயத்தக்கதென்னே, சொற்றேனிறைமறைக் கொம்பே மெய்ஞ்ஞானச்சுடர்க்கொழுந்தே, மற்றேரணியொற்றிவாழ்வேவடிவுடைமாணிக்கமே. (௭௭)

செவ்வேலைவென்றகண்மின்னேநின்சித்தந் திரும்பியெனக், கெவ்வேலைசெய்யென் றிடினுமவ் வேலையியற்றுவல்காண், டெவ்வேலைவற்றச் செயவ்வேலையின் றொற்றித் தேவர்நெஞ்சை, வவ்வேலவார்குழன்மானேவடிவுடைமாணிக்கமே. (௭௮)

தாயேமிகவுந்தயவுடையாளெனச்சாற்றுவரிச், சே
யேன்படுந்துயர்நீக்கவென்னேயுளஞ் செய்திலையே, நா
யேன்பிழையினி நாடாதுநல்லருணல்கவரு,வாயேயெம்
மொற்றிமயிலேவடிவுடைமாணிக்கமே. (௭௯)

நானேநினைக்கடியேனென்பிழைகளை நாடியநீ, தா
னேயெனைவிடிலந்தோவினியெவர்தாங்குகின்றோர், தே
னேநல்வேதத் தெளிவேகதிக்குச் செலுநெறியே, வா
னோர்பொழிலொற்றிமானேவடிவுடைமாணிக்கமே. ( )

கல்லாரிடத்திலென் னில்லாமைசொல்லிக் கலங்கி
யிடர், நல்லாண்மையுண்டருள்வல்லாண்மையுண்டெனி
னல்குவையோ, வல்லாரெவர்கட்கும்வல்லார் திருவொ
ற்றிவாணசெடி, மல்லார்பொழிலொற்றி வாழ்வேபோய்வ
டிவுடைமாணிக்கமே. (௮௧)

சுந்தரவாண்முகத்தோகாய்மறைகள் சொலும்பை
ங்கிள்ளாய், கந்தரவார்குழற்பூவாய்கருணைக்கடைக்கணொ
ங்கா, யந்தரமேநரிடைப்பாவாயருளொற்றியண்ணல்மகி
ழ், மந்தரநேர்கொங்கைமங்காய் வடிவுடைமாணிக்கமே

பத்தர்தம்முள்ளத்திருக்கோயின்மேவும்பாய்பரை
யே, சுத்தமெய்ஞ்ஞானவொளிப்பிழம்பே சிற்சுகானந்த
மே, நித்தநின்சீர் சொலவெற்கருள்வாயொற்றி நின்மல
ருண், மத்தர்தம்வாய்மையிலேவடிவுடைமாணிக்கமே (

பூவாய்மலர்க்குழற் பூவாய்மெய்யன்பர் புனைந்ததமி
ழ்ப், பாவாய்நிறைந்தபொற்பாவாய் செந்தேனிற்பகர்
மொழியாய், காவாயெனவயன்காவாய்பவனுங்கருதுமல,
ர்,மாவாயெழிலொற்றிவாழ்வே வடிவுடைமாணிக்கமே.

தாதாவுணவுடைதாதாவெனப்புல்லர் தம்மிடைப்
போய், மாதாகமுற்றவர்வன்னெஞ்சினின் னடிவைகுங்
கொலோ, காதார்நெடுங்கட்கரும்பேநல்லொற்றிக்கருத்
தர்நட, வாதாரிடம்வளர்மாதேவடிவுடைமாணிக்கமே.

களந்திரும்பாவிக்கடையேனையாளக் கருணைகொ
ண்டின், னுளந்திரும்பாமைக்கென்செய்கேன் றுயர்க்க
டனூடலைந்தேன், குளந்திரும்பாவிழிக்கோமானெடுந்
தொண்டர்கூட்டமுற, வளந்திரும்பா வொற்றி வாழ்
வேய்வடிவுடைமாணிக்கமே. (அசு)

ஆரணம்பூக்க வருட்கோமளக்கொடி. யந்திரிபூந்,
தோரணம்பூத்தவெழிலொற்றியூர்மகிழ்சுந்தரிசற், கார
ணம்பூத்தசிவைபார்ப்பதிநங்கௌரியென்னும், வாரண
ம்பூத்தனத்தாய்வடிவுடைமாணிக்கமே. (அஎ)

திருவல்லியேத்துமயிடேகவல்லி யெஞ்சென்னி
யிடை, வருவல்லிகற்பகவல்லிபொன்பச்சை யணிவல்

வியெங், கருவல்லிநீக்குங்கருணாம்பகவல்லி கண்கடோ
ற்றி, மருவல்லியென்று யறைதோர்வடிவுடை மாணிக்க
மே. (௮௮)

உடையென்னவொண்புலித்தோ லுடையார்கண்
டுவக்குமிள, நடையன்னமேமலர்ப்பொன் முதலாம்பெ
ண்கணாயகமே, படையன்னநீள்விழி மின்னேரிடைப்
பொற்பசுங்கிளியே மடைமன்னாநீரொற்றிவாழ்வேவ
டிவுடைமாணிக்கமே. (௮௯)

கற்பதுங்கேட்பதுமெல்லாநின்னற்புதக்கஞ்சமல
ர்ப், பொற்பதங்காணும்பொருட்டென வெண்ணாவர்பு
ண்ணியரோ, சொற்பசுமாயமைவக்கப்புறமாய் நின்றதூய்
ச்சுடரே, மற்பதஞ்சேரொற்றிவாழ்வே வடிவுடைமா
ணிக்கமே. (௯௰)

நின்றாலெனக்குள வெல்லாநலனு நினையடைந்தா
வென்றாலுனக்குள தென்னைகண்டா யெனையீன்றவ
ளே, முன்னாலவருக்கரு ளொற்றியெம்மான்கண் முழு
மணியே, மன்னான்மறையின்முடிவே வடிவுடைமாணி
க்கமே. (௯௧)

நன்றேசிவநெறிநாடுமெய்த்தொண்டர்க்குநன்மை
செய்து, நின்றேநின் சேவடிக்குற்றேவல்செய்ய நினை
த்தனனீ, தென்றேமுடிகுவதின்றே முடியிலினிதுக
ண்டாய், மன்றேறொழிலொற்றிவாழ்வே வடிவுடைமா
ணிக்கமே. (௯௨)

அத்தனையொற்றிக்கிறைவனையம்பலத்தாடுகின்ற முத்தனைச்சேர்ந்தவொண்முத்தேமதிய முகவமுதே, யித்தனையென்றள வேலாதகுற்றமிழைத்திடினும், மத்தனையாளல்வழக்கோவடிவுடைமாணிக்கமே. (௬௩)

கூறுதவாழ்க்கைச்சிறுமையைநோக்கிக் குறித்திடுமென், றேறுதவிண்ணப்பஞ்சற்றேனுநின்றன் றிருச்செவியில், வேறுதவண்ணமென்றொற்றித் தியாகரிடப்புறத்தின், மாறுதமர்ந்தமயிலேவடிவுடை மாணிக்கமே.(

ஓயாவிடர்கொண் டுலைவேனுக்கன்பர்க் குதவுதல்போ, லீயாவிடினுமோவெள்ளளவேனு மிரங்குகண்டாய், சாயாவருட்டருக்காயேயெழிலொற்றித் தற்பரையே மாயாநலமருள்வாழ்வே வடிவுடைமாணிக்கமே. (௬௫)

பெரும்பேதையேன்சிறுவாழ்க்கைத் துயரெனும் பேரலையிற், றுரும்பேயெனவலைகின்றேன் றுணைநின் றுணைப்பதமே,கரும்பேகருணைக்கடலேயருண்முக்கனி நறவே,வரும்பேரருளொற்றிவாழ்வே வடிவுடைமாணிக்கமே. (௬௬)

காதரவாலுட்கலங்கி நின்றேனின் கடைக்கணருளாதரவான்மகிழ்கின்றேனினியுன்னடைக்கலமே,சீதரனேத்துந் திருவொற்றிநாதர்தந் தேவியெழில், மாதரசேவொற்றிவாழ்வே வடிவுடைமாணிக்கமே. (௬௭)

பொன்னுடையாரன்றிப்போற்றுநற் கல்விப்பொ
ருளுடையா, ரென்னுடையாரென வேசுகின்றாரிஃதெ
ன்னையன்னே, மின்னுடையாய்மின்னிற்றுன்னிடையா
யொற்றிமேவு மக்கண், மன்னுடையாயென்னுடையாய்
வடிவுடைமாணிக்கமே. (௯௮)

பொய்விட்டடாதவன்னெஞ்சகத்தேனைப் புலம்பு
ம்வண்ணங், கைவிட்டடாதின்னுங் காப்பாயதுநின் கட
ன்கரும்பே, மெய்விட்டடாதிருள்வினையின்பமேயொற்
றிவித்தகமே, மைவிட்டடாவிழிமானே வடிவுடைமா
ணிக்கமே. (௯௯)

நேயானுகூலமனமுடையாயினிநீயுமென்றன், றா
யாகில்யானுன்றனையனுமாகி லென்றன்னுளத்தி, லோ
யாதுறுந்துயரெல்லாந்தவிர்த்தருளொற்றியிற்செவ்,வா
யாரமுதவடிவேவடிவுடையாணிக்கமே. (௱)

வாழிநின்சேவடிபோற்றிநின்பூம்பதவாரிசங்கள்,
வாழிநினருண்மலர் போற்றிநின்றண்ணளி வாழிநின்சீ
ர், வாழியென்னுள்ளத்தி னீயுநின்றொற்றி மகிழ்நருநீ,
வாழியென்னாருயிர்வாழ்வே வடிவுடைமாணிக்கமே. (

திருச்சிற்றம்பலம்,

வடிவுடைமாணிக்கமாலை-முற்றிற்று.